# கலைஞர் ஜே.பி. றொபட்

## மன்றம் அமைத்து அரங்கியல்கலை வளர்த்த கலைஞர் ஜே.பி. றொபட்:

ஒரு அரை நூற்றாண்டு காலம் ஈழத்து நாடக உலகுடன், குறிப்பாகக் கொழும்பு நாடக உலகுடன் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றி பல சாதனைகள் படைத்த அருங் கலைஞர் அமரர் ஜே.பி.றொபட் அவர்கள்.

கலைஞர்களைக் கண்டெடுப்பதும், உற்சாக மூட்டி வளர்ப்பதும், கௌரவிப்பதும் ஒரு சமுதாயப் பணி என்பதை முன்னிறுத்தி உழைத்த ஒரு உத்வேக நாடகக்காரர் இவர்.

ஜோன் பிலிப் றொபட் என்பது பெற்றோர் இட்ட பெயர். ஜே.பி.றொபட் என்பது கலை யுலகில் நிலைத்துவிட்ட பெயர்.

கொழும்பின் மரதானையில் 1937ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஏழாம் திகதி (07.03.1937) பிறந்தவர். தந்தையின் பெயர் ஜோன் பிலிப் தாயின் பெயர் விக்டோரியம்மாள். பம்பலப் பிட்டி செயின்ட் மேரிஸ் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்தார். கொள்ளுப் பிட்டி புனித அந்தோனியார் வித்தியாலயம் இவரை வளர்த்தெடுத்தது. எஸ்.எஸ்.சி வரை யிலான படிப்பும் நாடகம் மீதான கவனமும் ஏற்பட்ட இடம் இந்தக் கொள்ளுப்பிட்டி அந்தோனியார் வித்தியாலம்தான்.

பாடசாலை ஆசிரியர்களின் முயற்சியினால் பாடசாலை விழாக்களில் நடைபெறும் நாட கங்களில் நடிக்கும் வாய்ப்புக்கள் கிடைத் துள்ளன.

50களில் ஒரு 13 வயது மாணவனாக இருந்த போதே இவருடைய அரங்கியல் பயணத் துக்கான படிகள் இடப்பட்டுள்ளன. 'கமலா மனோகரன்' இவரை கல்லூரிமேடையில் ஏற்றிய முதல் நாடகம்.

பிறகு, 'பதிவிரதா' என்னும் பாடசாலை நாடகம். இன்னும் இரண்டொரு பாடசாலை நாடகங்களுடன் S.S.C பரீட்சையுடன் பாடசாலை வாழ்வு நிறைவுபட்டுவிட்டது. தந்தையின் மரணத்துடன் மேற்படிப்புக் கனவும் கலைந்து விட்டது. குடும்ப பாரம் தோளில் ஏற, ஒரு தனியார் கம்பெனிக்குள் அடைக்கலமானார்.

இவரது வீட்டுக்கு அருகே 'தருமக்கனி' என்கின்ற நாடகக்காரர் ஒருவர் வசித்திருக் கின்றார். அவர் தயாரித்து மேடையேற்றிய டி.கே.சண்முகத்தின் 'இன்ஸ்பெக்டர்' நாட கத்தில் மணி என்ற பாத்திரத்தில் பக்கத்து வீட்டுப் பையன் றொபட்டை நடிக்க வைத்த தன்மூலம் உள்ளே கனன்று கொண்டிருந்த கலைத் தணலை நாடகக்காரர் தருமக்கனி ஊதிவிட்டிருக்கின்றார்.


அந்த நாடகத்துப் பிறகு எல்லோரும் தன்னை மணி என்றே கூப்பிடத் தொடங்கினார்கள் என்று பெருமையுடன் கூறிக் கொள்ளும் றொபட் அதன் பிறகு நான் எந்தவொரு நாடகத்திலும் நடிக்கவில்லை என்றும் கூறு வார்.

இன்ஸ்பெக்டர் நாடகம் மேடையேறியபோது இவருக்கு 17 வயதிருக்கலாம் என்றால் 1954 அல்லது 1955 என்றாகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கையில் கோலோச்சிய காலமும் அது. இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகம் பலகிளைகள் அமைத்துச் செயலாற்றி வந்தது. கொள் ளுப்பிட்டியிலும் ஒரு கிளை இருந்தது. அதன் செயலாளர் ஜோன் சாமிநாதன். கலையுலக ஈடுபாடு கொண்ட இவர் றொபட்டின் நன்பரா னார். ஜோன் சாமிநாதன், எஸ்.ஏ.செல்லையா எஸ்.சுந்தரராஜா, எம்.டி.மோகன், டி.எஸ்.சமாத், ஜே.பி.றொபட் ஆகியோர் இணைந்து 1956ல் 'கவின் கலை மன்றம்' என்னும் ஒரு நாடக மன்றத்தை உருவாக்கினர்.

அந்த நாட்களில் நாடக மன்றங்கள் வெகு அபூர்வமாகவே இருந்தன. லடீஸ் வீரமணியும் கிருஷ்ணகுமாரும் தனித்தனியே இரண்டு நாடக மன்றங்கள் வைத்திருந்தனர்.

கவின்கலை மன்றத்தின் செயலாளராக ஜே.பி.றொபட் கடமை புரிந்தார். கவின் கலை மன்றம் 1957ல் தனது முதல் நாடகத்தை அரங்கேற்றியது. ஜோன் சாமிநாதன் எழுதி நெறிப்படுத்திய சீதனம் இவர்களுடைய முதல்



நாடகம். அடுத்தது யுவன் எழுதிய நூதன லஞ்சம். இந்த இரு நாடகங்களும் ஐம்பது களில் பிக்சர்ஸ்லேன் என்று அழைக்கப்பட்ட மரதானை மொயிதீன் மஜீட் வீதியில் மேடை அமைத்து நடிக்கப்பட்ட நாடகங்கள். 1957ல் 'ரோமியோ ஜுலியட்டும்' (சா.சண்முகநாதன் உரையாடல்) 1959ல் பி.சி.கணேசனின் 'எழுத் தாளன் காதலி'யும் பொறளை வை.எம்.பி.ஏ மண்டபத்தில் மேடையேறிற்று.

இந்த நாடகங்களை இயக்கியவர் ஜோன் சாமிநாதன். கூட இருந்தவர் ஜே.பி.றொபட். ஜெ.பி.றொபட் ஒரு இயக்குனராக உருவா குவதற்கு ஜோன் சாமிநாதனும் முக்கிய காரணகர்த்தராக விளங்கி இருக்கின்றார்.

1961ல் ஞானமூர்த்தி எழுதிய ஞான ஒளி என்ற நாடகத்தை நாடகாசிரியரின் அனுமதி யுடன் 'நம்பிக்கைத்துரோகி' என்று பெயர் மாற்றி பொரளை வை.எம்.பி.ஏ.மண்டபத்தில் மேடையேற்றினார் றொபட். இது அவர் இயக் கிய முதல் நாடகம்.

**- தெளிவத்தை ஜோசப் -**

1963ல் 'உடைந்த உள்ளம்' என்ற நாடகத்தை எழுதி இயக்கி மேடை ஏற்றினார் றொபட். கவின்கலை மன்றம் மேடையேற்றிய றொபட் அவர்களின் முதல் நாடகம் உடைந்த உள்ளம்.

அதன்பிறகு 'சிறகொடிந்த பறவை', 'ஏமாற்றம்' 1967, 'சொல்லாத கதை' 1976, 'இளமைக் கோலங்கள்' 1984, 'திருந்திய உள்ளம்' 1984, ஆகிய நாடகங்களை மேடை ஏற்றி இருக் கின்றார் அமரர் றொபட்.

1967ல் இவர் மேடையேற்றிய 'சிறகொடிந்த பறவை' நாடகத்துக்கு காலம் சென்ற சில்லையூர் செல்வராஜன் பாடல்கள் எழுதி யுள்ளார். கலாபூஷணம் எம்.ஏ.குலசீலநாதன் இசை அமைத்ததுடன் அவரே ஒரு சில பாடல்களைப் பாடியும் இருக்கின்றார். லயனல் வெண்ட தியேட்டரில் மேடை ஏறிய இவருடைய ஏமாற்றம் நாடகத்துக்கு பிரதம அதிதியாக வந்திருந்தவர் பலசர்வதேச விருதுகளைப் பெற்ற பிரபல திரைப்பட இயக்குனர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் அவர் கள்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி, பிரபல நாவலா சிரியர், நாடகாசிரியர் அ.ந.கந்தசாமி ஆகி யோர் இந்நாடக அரங்கேற்றத்துக்கு அழைக் கப்பட்டு வந்திருந்தனர்.

தன்னுடைய நாடகங்களை மட்டுமின்றி பிறருடைய நாடகங்களையும் தன்னுடைய கவின் கலை மன்றம் மூலமாக மேடை ஏற்றியுள்ளார். நெறியாளராகவும் பணியாற்றி யுள்ளார்.

மாத்தளை கார்த்திகேசு அவர்களின் அனை த்து நாடகங்களையும் (ஒன்றைத்தவிர) தயா ரித்து இயக்கி கொழும்பில் மட்டுமல்லாமல் யாழ்ப்பாணத்திலும் மற்றும் இலங்கையின் பல இடங்களிலும் மேடை ஏற்றியுள்ளார்.

ஜோ.ஜி.ஜெயசீலன், கே.வி.எஸ்.நாதன் சி.சண் முகம், மொழிவாணன், பி.எஸ்.ராமச்சந்திரன், மாத்தளை கார்த்திகேசு, கே.கோவிந்தராஜ் போன்றவர்களால் எழுதப்பட்ட 50க்கும் மேற் பட்ட நாடகங்களை இயக்கி கவின்கலை மன்றம் மூலமாக மேடையேற்றியுள்ளார் அமரர் ஜே.பி.றொபட்.

1972ல் இலங்கை கலாச்சாரப் பேரவை நடத் திய நாடகவிழாவில் மாத்தளை கார்த்திகேசு வின் காலங்கள் அழுவதில்லை நாடகத்தினை நெறியாள்கை செய்து கவின் கலைமன்றம் மூலம் மேடையேற்றினார் றொபட்.

**ஆழத்து முத்துக்கள் 83**

சிறந்த நெறியாளருக்கான விருதும் சிறந்த நாடகத்துக்கான விருதும் இந்த நாடகத்-துக்குக் கிடைத்தது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்ராய்ச்சி மகாநாட்டின்போது, பேராசிரியர் கைலாசபதி மற்றும் கவிஞர் முருகையன் முன்னிலையில் காலங்கள் அழுவதில்லை நாடகம் மீண்டும் மேடை ஏற்றப்பட்டது.

'இயல்பான நடிப்பும், அடக்கமான காட்சிய மைப்பும் கூர்மையான நெறியாள்கையும் நாடகத்துக்கு மெருகூட்டின' என்று பேரா சிரியர் கைலாசபதியும் 'தொழிலாளர்களின் உண்மையான வாழ்க்கையை கண்கூடாகக் காட்டிய ஒரு கலை நெறியின் உன்னதமான அனுபவம்' என்று கவிஞர் முருகையனும் பாராட்டுத் தெரிவித்தனர்.

மாத்தளை கார்த்திகேசு அவர்கள் கதை வசனம் எழுதித் தயாரித்த 'அவள் ஒரு ஜீவநதி' திரைப்படத்தையும் இயக்கியவர் ஜே.பி.றொபட் அவர்களே.

தொலைக்காட்சிக்காக 'பலேபுரடியூசர்', 'வெண்ணிலா', 'களங்கம்', 'சுட்டும் சுடர்கள்', 'தீர்ப்பு', குடும்பம் ஒரு கதம்பம்', நம்பிக்கைத் துரோகி போன்ற நாடகங்களையும் இவர் இயக்கியுள்ளார்.

'கலாஜோதி' என்னும் விருதினையும் கலா பூஷணம் விருதினையும் இந்து சமயகலா-சாரத்திணைக்களம் இவருக்களித்துக் கௌர வித்துள்ளது.

கவின் கலை மன்றத்தின் தலைவராக இவர் 2000ஆம் ஆண்டுகளில் இருந்தபோது அமரர் கே.கோவிந்தராஜ் செயலாளராகப் பணியாற் றினார். கலைஞர் கந்தையா பொருளாள-ராகக் கடமையாற்றினார்.


இந்தக் கவின் கலை மன்றம் மூலமாக ஜே.பி.றொபட் அவர்கள் நடிகர்களைத் தேடிக் கண்டடைந்து உற்சாகமூட்டிப் பயிற்சி அளித்து பிரபலமடையச் செய்துள்ளார்.

இவரால் உருவான நடிக, நடிகையர்கள் நாடக உலகில் கோலோச்சியுள்ளனர்.

நாடகக் கலைஞர்களை கௌரவித்தல், விருதுகள் வழங்குதல், கலைஞர் ஒருவரின் மறைவுக்கான அஞ்சலி செலுத்துதல் என்று கலைக்காகவே பணியாற்றிய கவின் கலை மன்றம் என்னும் அமைப்பின் பிதாமகன் அமரர் ஜே.பி.றொபட்.

திருமணத்தின் பின் வத்தளைவாசியாக இருந்த கலாபூஷணம் ஜே.பி.றொபட் அவர்கள் சுகவீனமுற்று 2006ஆம் ஆண்டு அமரத்து வம் எய்தினார். (25.11.2006)

ஈழத்து நாடக உலகுக்கு குறிப்பாக கொழும்பு நாடக உலகிற்கு அவர் ஆற்றியுள்ள சேவை மகத்தானது. அளப்பரியது.



theliwathai.joseph@thaiveedu.com

**உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?**

**கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.**

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**